**செய்தி வெளியீடு எண்: 061** **நாள்: 23.01.2020**

**<u>இன்று (23.1.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரை:</u>**

**மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,**

இந்திய தேசிய ராணுவப் படையில் பணியாற்றிய தமிழர்களின் வீரத்தினை போற்றும் வகையில், **"அடுத்த பிறவியில் நான் தமிழனாக பிறக்க வேண்டும்"** என்று முழக்கமிட்ட **நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்** அவர்களது திருவுருவச் சிலையை, ஆளுநர் மாளிகையில் அவரது பிறந்த நாளான இன்று திறந்து வைக்கும் விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவில்,

**நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின்**
**திருவுருவச் சிலையினை திறந்து வைத்து**
**விழாப் பேருரை ஆற்றவுள்ள**
மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவர்
**திரு. வெங்கைய நாயுடு அவர்களே!**

**தலைமையுரை** ஆற்ற உள்ள
மாண்புமிகு தமிழக ஆளுநர்
**திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களே!**

**சிறப்புரை** ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

**சிறப்பு விருந்தினராக** பங்கேற்றுள்ள
மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்
**திரு. ப.தனபால் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற
**சென்னை பாரதீய வித்யாபவன் சேர்மன் திரு. ரவி அவர்களே!**
**பாரதீய வித்யாபவன் இயக்குநர் திரு.ராமசாமி அவர்களே!**

வருகை தந்திருக்கின்ற
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!**
**மரியாதைக்குரிய திரு.ஜெயக்குமார் அவர்களே!**
**மரியாதைக்குரிய திரு.பெஞ்சமின் அவர்களே!**
**மரியாதைக்குரிய திரு.பாண்டியராஜன் அவர்களே!**
**தலைமைச் செயலாளர் அவர்களே!**
**காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற

**ஆற்காடு இளவரசர் அவர்களே!**

**முன்னாள் அமைச்சர் திரு.ஹெச்.வி.ஹண்டே அவர்களே!**

**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கணேசன் அவர்களே!**

**பெரியோர்களே! தாய்மார்களே!**

**பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!**

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

'**இந்தியா உடனடியாக சுதந்திரம் அடைய வேண்டும் என்றால் அதற்கு ஒரே வழி போர் மட்டுமே**' என தீர்மானித்து, இந்திய தேசிய ராணுவத்திற்கு புத்துயிர் அளித்து, ஆங்கிலேயரை எதிர்த்து, நாட்டின் விடுதலைக்காக ராணுவ ரீதியாக போராடிய மாவீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும் பிறந்த அதே வங்க மண்ணில், 1897–ஆம் ஆண்டு இதே நாளில், திரு.ஜானகிநாத் போஸுக்கும், திருமதி.பிரபாவதி தேவிக்கும் மகனாகப் பிறந்து, பிற்காலத்தில் இந்திய சுதந்திர போராட்டத்தின் தன்னிகரற்ற தலைவராக விளங்கியவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள்.

அவர் தன்னுடைய பெற்றோர்களின் விருப்பத்திற்காக 1919ஆம் ஆண்டு ஐ.சி.எஸ். தேர்வுக்கு படிக்க லண்டன் சென்றார். இந்தத் தேர்வில் இந்தியாவிலேயே நான்காம் இடம் பெற்றார்.

இந்திய சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி அடைந்த சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கு கிடைத்த பெரும் பதவி – அரசு உத்தியோகம் ஆகியவை எல்லாம் ஆங்கிலேயர் முன் அவரை மண்டியிடச் செய்யவில்லை. மாறாக, ஆங்கிலேயர் ஆட்சியின் அடக்குமுறையின் காரணமாக, தனது ராஜினாமா கடிதத்தை மாண்டேகு பிரபுவிடம் அளித்தார். மதிப்பு மிக்க பதவியை வேண்டாம் என்று உதறித் தள்ளிய அவரைப் பார்த்து, "**உன் பெற்றோர் வருத்தப்பட மாட்டார்களா ?**" என்று மாண்டேகு பிரபு கேட்டதற்கு, "**என் தாய் தந்தையருக்கு வருத்தமாகத் தான் இருக்கும். ஆனால் என்**

**தாய்நாட்டின் வருத்தம் அதை விடப் பெரியது**” என்று சொல்லி அவருக்கு அதிர்ச்சி அளித்தார்.

பின்னர், நாட்டின் விடுதலைக்காக போராடிக் கொண்டிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். வங்கத்தைச் சேர்ந்த சுதந்திர போராட்ட வீரர் திரு. சி.ஆர்.தாஸ் அவர்களை குருவாகக் கொண்டு தனது அரசியல் பயணத்தை தொடங்கினார்.

வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருவதை எதிர்த்து நாடெங்கிலும் “**புறக்கணிப்பு இயக்கம்**'' தொடங்கப்பட்டது. கல்கத்தாவில் சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டம் முழு வெற்றியைப் பெற்றது. இதைக் கண்டு வெகுண்ட ஆங்கிலேயே அரசு, தடையை மீறியதற்காக **1921**ஆம் ஆண்டு டிசம்பர் **10**ஆம் தேதி அவரை கைது செய்து ஆறு மாதம் சிறை தண்டனை அளித்தது. இதுதான் அவருக்கு கிடைத்த முதல் சிறை தண்டனையாகும்.

பின்னர் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களில் தீவிரமாக பங்கு கொண்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், அதிக அளவில் மக்களை சுதந்திரப் போராட்டங்களில் பங்கு பெறச் செய்தார். இதனால் நாளுக்கு நாள் மக்களிடையே சுதந்திர உணர்வு அதிகரித்து வந்தது. இவர், மக்கள் ஆதரவு பெற்ற ஒரு பெரும் தலைவராக பார்க்கப்பட்டார். இதனைக் கண்டு அஞ்சிய ஆங்கிலேய அரசு, அவரை கடல் கடந்து பர்மாவில் உள்ள சிறைக்கு மாற்றியது.

மேண்டலே சிறையின் காலநிலை நேதாஜியின் உடல் நிலைக்கு ஒத்து வராமல், அவருக்கு காசநோய் ஏற்பட்டது. அவரை விடுவிக்கக் கோரி நாடு முழுவதும் மக்கள் போராட்டம் நடத்தினர். இவரது உடல்நிலை ஆபத்தான நிலையை எட்டியதால், மன்னிப்புக் கேட்பது உள்ளிட்ட சில நிபந்தனைகளுடன் அவரை விடுதலை செய்ய நினைத்தது அன்றைய ஆங்கிலேய அரசு. ஆனால் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள், ''**நான் ஒன்றும் கோழையல்ல, மன்னிப்பு கேட்க. என்னை என் நாட்டுக்குள் வரக் கூடாது என்று சொல்ல இவர்கள் யார்? இந்த நிபந்தனைகளை என்னால் ஏற்க முடியாது**'' என்று சொல்லி விடுதலையாக மறுத்துவிட்டார். மரணத்தின் பிடியிலும் மங்காமல் ஒலித்த அந்த சிங்கத்தின் கர்ஜனையைக் கண்டு, ஆங்கிலேய அரசு அவரை விடுதலை செய்தது.

காங்கிரஸ் கட்சியில் வேகமாக வளர்ந்து வந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள், அக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்கும் நிலைக்கு உயர்ந்தார். குஜராத்

மாநிலம் அரிபுரா நகரில் நடந்த தேசிய காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் தலைவரானதற்கு, ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் பாராட்டுக் கூட்டம் நடத்தி, அவருக்கு "**நேதாஜி**" என்ற பட்டத்தை அளித்தார். "**மரியாதைக்குரிய தலைவர்**" என்பது தான் இதன் அர்த்தம்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஓராண்டு காலத்தில், அவர் மிகப் பெரிய விடுதலைப் போராளி என்று இந்திய மக்களின் இதயத்தில் இடம் பிடித்தார். அவரது சுற்றுப்பயணமும், பிரச்சாரமும், அனல் பறக்கும் பேச்சும், ஆங்கிலேய அரசுக்கு எதிராக மக்களின் உணர்வை வேகமாக தூண்டி விட்டது.

இதன் விளைவாக, 1939–ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் தலைமைக்காக நடந்த தேர்தலிலும் நேதாஜி அவர்கள் வெற்றி பெற்றார். ஆனால், கட்சியில் ஏற்பட்ட சில கருத்து வேறுபாடுகளால், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, '**அகில இந்திய பார்வர்டு பிளாக்**' என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றைத் தொடங்கினார். அக்கட்சியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த பசும்பொன் தேவர் திருமகனார் துணைத் தலைவராக பொறுப்பேற்றார். "**இந்தக் கட்சி விரைந்து செயல்பட்டு, இந்தியாவிற்கு சுதந்திரத்தை பெற்றுத் தரும்**" என்றார் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள்.

நேதாஜியைப் பற்றி, காந்திஜி அவர்கள் குறிப்பிடுகையில், '**நானும் சுபாஷும் இந்திய விடுதலைக்காக போராடுகிறோம். ஆனால் போராடும் வழிமுறைகள் வெவ்வேறு விதமானது**' என்று குறிப்பிட்டார்.

பின்னர் நேதாஜி அவர்கள், நமது நாட்டின் விடுதலைக்காக பிற நாடுகளின் உதவிகளைப் பெற எண்ணினார். அவரைக் கண்காணித்துக் கொண்டிருந்த ஆங்கிலேயரின் கண்களில் மண்ணைத் தூவி, தரை வழியாகவே பயணம் செய்து, ஆப்கானிஸ்தானையும், பின்னர் அங்கிருந்து பெருமுயற்சி எடுத்து ஜெர்மனியையும் அடைந்தார். நேதாஜி அவர்களை காணவில்லை என நாடே தவித்துக் கொண்டிருந்த வேளையில், ஜெர்மனியிலிருந்து நேதாஜி அவர்கள் முழங்க, மொத்த உலகமுமே இந்தப் போராளியை பார்த்து வியந்தது. தன் நாட்டின் சுதந்திரத்திற்காக தனி ஒரு மனிதனால் இவ்வளவு தூரம் செல்ல முடியுமா என உலகெங்கும் இவரது பெயர் ஒலிக்க இந்த நிகழ்வும் ஒரு காரணமாக அமைந்தது.

**1941**–ஆம் ஆண்டு "**சுதந்திர இந்திய மையம்**" என்ற அமைப்பை தொடங்கிய நேதாஜி அவர்கள், "**ஆசாத் ஹிந்த்**" என்ற ரேடியோவையும் பெர்லினில் இருந்து

தொடங்கியதோடு மட்டுமல்லாமல், இந்திய விடுதலைப் போரை மையப்படுத்தியும், உலகப் போர் பற்றிய செய்திகளையும் இதில் ஒலிபரப்பினார்.

இரண்டாம் உலகப் போரின்போது எங்கும் போர் விமானங்கள் குண்டுகள் வீசிக் கொண்டிருந்த நேரத்தில், எதற்கும் அஞ்சாமல், ஜெர்மனியில் இருந்து நீர்மூழ்கி கப்பல் வழியாக மூன்று மாதம் பயணம் செய்து ஜப்பானை அடைந்து, பின் சிங்கப்பூர் வந்தடைந்தார். அங்கு திரு. ராஷ் பிஹாரி தாஸ் அவர்களால் தொடங்கப்பட்டு, செயல்படாமல் இருந்த **இந்திய தேசிய ராணுவத்திற்கு** புது ரத்தம் பாய்ச்சி, அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். தனது சீரிய பேச்சால் ஒவ்வொரு இளைஞனையும் போரில் பங்கு பெறச் செய்தார்.

இந்தியா விடுதலை பெற்றால் தான், ஆசியாவில் உள்ள மற்ற நாடுகளும் விரைவில் விடுதலை அடைய முடியும் என்று அறைகூவல் விடுத்தார். இதனையடுத்து, தமிழ்நாட்டிலும், மலேசியாவிலும், பர்மாவிலும் இருந்த தமிழின மக்கள் ஆயிரக்கணக்கில் இந்திய தேசிய ராணுவத்தில் தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல் இணைந்தனர். இவர்களில் பலர் இந்திய தேசிய ராணுவத்தின் உயர் பதவிகளிலும் இருந்தனர்.

நேதாஜி அவர்களின் போராட்டத்திற்கு தமிழர்கள் பல வழிகளில் உதவி புரிந்துள்ளனர். உதாரணத்திற்கு, தமிழ்நாட்டிலிருந்து பசும்பொன் தேவர் திருமகனாரால் சுமார் 600க்கும் மேற்பட்ட தமிழர்கள் நேதாஜி அவர்களின் இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்தனர். அவரது இந்திய தேசிய ராணுவத்தில் பெண்கள் படைப் பிரிவுக்கு **ராணி ஜான்சி** என பெயரிட்டிருந்தார். அதன் தலைவியாக வீரத் தமிழ்ப் பெண்ணான கேப்டன் லட்சுமி இருந்தார். இந்தப் படையில் கேப்டன் ஜானகி தேவர் என்ற தமிழ்ப் பெண்மணியும் பெரும் பங்காற்றினார்.

பெரிய வியாபாரியான திரு. நாயுடு என்பவர், நேதாஜியின் விருப்பத்திற்கேற்ப, போரின்போது ஜெர்மனியில் தமிழ் வானொலி நிகழ்ச்சிகளை நடத்தினார். நேதாஜியின் சமையல்காரர், தமிழரான திரு.காளி. நேதாஜி சிங்கப்பூர் வந்தபோது அவரை வரவேற்றவர், திரு. சிதம்பரம் என்ற தமிழர்.

மேலும், மலேசியாவில் நேதாஜிக்கு ஆதரவாக "**யுவ பாரதம்**", "**சுதந்திர இந்துஸ்தான்**" போன்ற தமிழ் இதழ்கள் வெளிவந்தன. நேதாஜி அவர்களின் தாரக மந்திரம் "**ஜெய் ஹிந்த்**" அதாவது வெல்க பாரதம். அதை நேதாஜிக்கு அறிமுகப்படுத்தியவர் **செண்பகராமன் பிள்ளை** என்ற வீரத் தமிழர்.

நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தின் வளர்ச்சியைக் கண்டு எரிச்சல் அடைந்த வின்ஸ்டன் சர்ச்சில், ‘‘**மலேசியா ரப்பர் தோட்டத்தில் ரப்பர் பால் உறிஞ்சும் தமிழர்களின் ரத்தம் நேதாஜி மூளையில் கட்டியாக உள்ளது**” என்றார். அதற்கு பதில் அளித்த நேதாஜி அவர்கள் ‘‘**இந்த தமிழர்கள் தான் பின்னாளில் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ரத்தத்தை குடிப்பார்கள்**’’ என்று கூறினார்.

இந்தியாவின் விடுதலைக்காக நேதாஜி அவர்கள் நடத்திய இந்திய தேசிய ராணுவம் மற்றும் காந்திஜி அவர்கள் நடத்திய பல்வேறு சுதந்திர போராட்டங்களில் தமிழர்களின் பங்கு மிகவும் மகத்தானது என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அனைத்துத் துறைகளிலும் உலக நாடுகள் வியக்கும் வண்ணம் நமது நாடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இதனை மேலும் முன்னெடுத்துச் செல்ல, நேதாஜி அவர்களின் பிறந்த நாளான இன்று நாம் அனைவரும் உறுதி மேற்கொள்வோம். நாட்டின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த நேதாஜி அவர்களைப் போன்று, தன்னலம் கருதாது பொது நலனுக்காக தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்று இன்றைய இளைய சமுதாயத்தினரை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்த மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு எனது வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித்திரு நாடு!

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**